(பிரத்தியேக விநியோகத்திற்கு மட்டும்)

# எழுச்சி

**அரசாங்க எழுது வினைஞர் சங்கம்**

62, 1/5, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு-2.

எழுச்சி; 1. | திருவள்ளுவராண்டு 1993—சித்திரைத் திங்கள் | இதழ்; 4.

## திராவிடப் பாட்டாளி மக்களே, ஒன்று சேருங்கள்!

(உபயம்—முரசொலி)

'உலகப் பாட்டாளிமக்களே ஒன்று சேருங்கள்!' இந்த முழக்கத்தை இடியோசை போல் முழக்கிக் காட்டுகிறது, மார்க்ஸ் சொல்லிக் கொடுத்து, மாவீரர் லெனினும், ஸ்டாலினும் — இசைத்துக் காட்டும் வேதப் புத்தகம்!

அதே நேரத்தில்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே நம்மைச் சுரண்டி: தொப்பை விழப் பெற்ற வடநாட்டு யானைகளின் காலடியிலே சிக்கித் தவித்திடும் நாம் கூக்குரல் கொடுக்கிறோம் 'திராவிடப் பாட்டாளி மக்களே; ஒன்றுசேருங்கள்!'—என்று?

'குறுகிய மனப்பான்மை; குள்ளநரிக் குணம்!'—தாவி வருகின்ற கண்டனைக் கணைகள் ஒரு புறத்திலிருந்து!

'இனவெறி கொண்டவர்கள்; வேற்றுமை மனப்பான்மை உடையவர்கள்'—புழுதி வாரி வீசுகிறார்கள் ஒரு சாரார்!

'தொழிலாளர் சக்தியைப் பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள்; செவி சாய்க்காதீர், இவர்கள் பேச்சுக்கு'—பொருமையுணர்ச்சியால் தாக்குண்டவர்கள் நம்மைத் தாக்குகிறார்கள் இப்படி!

இருந்தாலும்; இந்தப் புயலுக்கும் புகைச்சலுக்கும் கலங்காமல் வருங்கால விடுதலையைக் கலங்கரை விளக்கமாகக் கொண்டு, எல்லாத் தொழிலாளர்கள் முனையிலும் அவர்கள் தோளோடு தோள் நின்று; பாசறை அமைத்துப் போரிட்டு வருகிறோம்!

மற்றவர்களைப்போல் நாம் தற்காலிகக் கூலி உயர்வினை மட்டும் குறிக்கோளாக வைத்து ஏதுமறியா தொழிலாளர் சக்தியை ஆட்டு மந்தைகளாக நினைத்து; அவர்களை நம் நாட்டிற்கு அப்பாலிருக்கும் சக்திகள் பால் அடகு வைப்பதில்லை!

ஒரு மோதிரத்துக்குள் நுழைந்து செல்லும் விதத்திலே, சிலந்தி வலையைவிட; பாம்புச்சட்டையைவிட-மெல்லிய-மிகமெல்லிய ஆடைகளை அகிலத்தின் சந்தைகளுக்கெல்லாம் அனுப்பி--அகில்--தேக்கு--மயில் -- மிளகின் சொந்தக்காரன் இன்று ஓணானினும் ஒட்டிய வயிறு கொண்டவனாய்; உடல் இளைத்தவனாய் ஒதியமிலாரினும் உபயோகமற்றவனாய் மாறியது ஏன்?--என்று கேட்டு, திராவிடத்தின் தொழிலாளத் தோழர்களின் பாட்டன்மார்கள் வாழ்ந்த பெருவாழ்வினைச் சுட்டிக்காட்டி இன்று வடநாட்டவர் ஆட்சியால் அவன் அனுபவித்து வரும் பெருநோய் பிடித்த வாழ்க்கையின் இழிதகை நிலைமையையும் எடுத்தியம்பி--வருங்கால வரலாற்றினைத் திருத்தியமைப்பதற்குத்தான் அணுப் பொழுதையும் வீணாக்காமல் உழைத்து வருகிறது......!

## வழக்கு தாக்கல் செய்யப்பட்டது!

தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கம் திறைச்சேரி செயலாளருக்கு எதிராகத் தொடர இருந்த வழக்கு 14-5-62ல் தாக்கல் செய்யப்பட்டது. அட்டேணி ஜெனரலுக்கு எதிரான வழக்கு இவ்விதழ் அச்சாகி வெளி வருமுன் தாக்கல் செய்யப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு வழக்குகளையும் சங்க சார்பில் திரு. M. திருச்செல்வம், Q.C., திரு. S, சர்வானந்தா, திரு. G. T. சமர விக்ரமா, புரெக்டர் லூசியன் பெரேரா ஆகியவர்கள் நடத்துவர்.

# செயலாளரின் குறிப்புகள்

## இரண்டாவது 25% சம்பள முற்பணம்

**சங்கத்தின் வேண்டு கோளுக்கிணங்கத் திறைசேரி சுற்றுநிருபம் விடுத்துள்ளது.**

ஜனவரி மாதத்து இரண்டாவது முற்பண நாள், தைப்பொங்கல் தினமாகிய விடுமுறை நாளில் வந்தபடியால், அம்முற்பணம் கொடுப்பதை 15-1-62க்குப் பிற்போடாமல், 13-ந் திகதியன்றே கொடுக்கும்படியும், அத்துடன் சம்பள முற்பண நாட்கள் விடுமுறை நாட்களில் வந்தால், அதனை முதல் நாளே கொடுப்பதற்கு ஓர் சுற்று நிருபம் விடுக்கும்படியும் சங்கம் கேட்டுக் கொண்டது.

இதற்கிணங்க ஜனவரி மாத முற்பணம் 13ந் திகதி கொடுக்கப்பட்டதுடன், இவ்வருடம் 14-4-62, 14-8-62 ஆகிய தினங்களில் கொடுக்கப்பட வேண்டிய முற்பணங்களை 13-4-62, 13-8-62 ஆகிய தினங்களில் கொடுக்கும்படி திறைசேரி 16-3-62ல் 344/9/85(PT/ P)ஐக் கொண்ட சுற்றுநிருபக் கடிதமொன்றை விடுத்துள்ளதாகச் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

## தேசீய அபிவிருத்தி வரி

மேற்படி வரி பற்றி 24-8-62ல் நிதி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து 1-5-62ல் சங்கம் வேறோர் கடிதம் எழுதியுள்ளது.

விலைவாசி உயர்வால் அவதியுறும் மத்திய தர வகுப்பினரை இவ்வரி வெகுவாகப் பாதித்துள்ளது.

இவ்வரி பற்றிக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய திருத்தமொன்றின்படி பாராளுமன்ற உறுப்பினர்களினதும் செனட்டர்களினதும் வருவாயில் விதிக்கப்படும் வரி, அவர்களின் வருவாயின் ஒரு பகுதியையே பாதிக்கும். அவர்கள் வருமான வரி செலுத்தாத பகுதி இவ்வரியிலிருந்து நீக்கப்படும்.

இதே சலுகை சாதாரண மக்களுக்கும் அளிக்கப்படுதற்கு உரியவாறு சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது.

## நிறைவேற்று வகுப்பு தரம் II

அண்மையில் தரம் I க்கு நடைபெற்ற வகுப்பேற்றத்தால் தரம் IIல் ஏற்பட்ட 84 வெற்றிடங்களையும் முன்னுள்ள 172 வெற்றிடங்களுடன் சேர்த்து 256 வெற்றிடங்களையும் இம்முறை நிரப்பும்படி திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு எழுதியுள்ளோம்.

*******************

**சிந்தியுங்கள்!**

எந்த இனத்து<br>
இளைஞர்களது<br>
இதயங்கள் எஃகுபோல்<br>
உறுதியாகஇருக்கிறதோ<br>
அந்த இனத்துக்கு<br>
வாள் தேவையில்லை.

—கவி இக்பால்.

*******************

## மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ள பெயர்ப் பலகைகள் முதலியன தனிச் சிங்கள மொழியில் மட்டும் இருப்பதால் உறுப்பினர்களுக்குப் பல வகைகளிலும் கஷ்டங்கள் கொடுப்பதாகச் சுட்டிக்காட்டி, அவை யாவும் மூன்று மொழிகளிலும் இருக்க வேண்டுமென்று கோரி, நிதி அமைச்சுக்கு நகலுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு எழுதியுள்ளோம்.

## முதலாவது வழக்கு

சிங்கள மொழித் தேர்ச்சியில் லாவிட்டால் 55 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு இல்லையென்று விடுக்கப்பட்ட, 555ம் இலக்கத் திறைசேரி சுற்று நிருபம் சட்டத்துக்கு முரணானது என்று குற்றஞ் சாட்டி, திறைசேரிச் செயலாளருக்கு எதிராக, கொழும்பு, மாவட்ட நீதி மன்றத்தில் 14-5-62ல் ஓர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் விபரம் வேறு பக்கத்திலுள்ளது.

## இரண்டாவது வழக்கு

ஊதிய உயர்வைத் தடுக்கும் 560ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபம் சட்டத்துக்கு முரணானதும், பாரபட்சமானதுமென்று குற்றஞ்சாட்டி அரசாங்கத்துக்கெதிராகச் சில தினங்களில் ஓர் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

24–9–56க்கு முன் சேவையிற் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, அதற்குப் பின் புதிய நிபந்தனைகளின்படி சேவையிற் சேர்ந்தவர்களுக்கும் விமோசனமேற்படும் வகையில் இவ்வழக்கு அமையும்.

## வேண்டுகோள்

இச்சங்கம் அதன் உறுப்பினர்களின் எந்த உரிமைகளுக்காக வழக்குத் தொடர்ந்தும் பிற வழிகளிலும் போராடுகிறதோ, அந்த உரிமைகளை இழக்கும் விதத்திலோ, அல்லது எமது போராட்டங்களைப் பெலவீனப்படுத்தும் வகையிலோ உறுப்பினர்கள் நடந்துகொள்ளாது, தங்களின் ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொருளுதவி செய்வது மட்டும் ஆதரவு ஆகாது. எமது நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் முரணான வகையில் மனம், மொழி, மெய்களால் எதுவும் செய்யாதிருப்பதும் இன்றியமையாத ஆதரவாகும் என்பதை உறுப்பினர்கள் உணர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம்.

புதிய தொழிற்சங்க சுலோகம்

# "(மொழி வழி) பிரிந்தால் வாழ்வோம்; இன்றேல் வீழ்வோம்!"

எமது மே தினச் செய்தியில் அடங்கிய மேற்படிசுலோகம் தொழிலியக்க வாதிகள் மத்தியில் பெருமளவில் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. இது இயற்கையே! இச்சுலோகத்தில் தமிழ் பேசும் ஊழியருக்கு நம்பிக்கை இல்லாதவிடத்தில் நம்பிக்கை ஊட்டு முகமாகவும், உள்ளவிடத்தில் வலுப்படுத்தும் முகமாகவும் எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவற்றை ஆராய்ந்து, ஆதாரமிருப்பின், உங்களுக்கு அறியத் தரும் நோக்கத்துடன் இத்தொடரை இவ்விதழில் ஆரம்பித்திருக்கிறேன்.

(குறிப்பு: உங்கள் அலுவலகங்களில் இது போன்ற சம்பவங்கள் நடந்தால் எமக்கு உடன் அறிவிக்கவும்).

1

"அவர் ஒரு தமிழரசுவாதி!"

1956-ம் ஆண்டு தேர்தலுக்குப் பின் மந்திரிகளும் மற்றவர்களும் தாம் விரும்பாத தமிழ் ஊழியர் மேல் "தமிழரசு வாதி" என்று குற்றஞ் சாட்டி வந்திருக்கிறார்கள். இவ்விதக் குற்றச்சாட்டால் இடர்பட்டோர் பலர். ஒருவர் சுதந்திரக் கட்சி அனுதாபியாயிருக்கும் பொழுது இன்னொருவருக்கு தமிழரசு அனுதாபியாயிருக்க உரித்து இருக்கிறதா, இல்லையா என்பதல்ல பிரச்சினை.

எடுத்ததற்கெல்லாம் ஒருவரை "தமிழரசு அனுதாபி" என்று தாக்குவது எவ்வளவு தூரம் போயிருக்கிறது என்று காட்டுகின்றது கீழே தரப்படும் சம்பவம். அதுவும் இப்பொய்ப் பிரசாரத்தில் தொழிலாளர் தொழிற் சங்கப் பிரமுகர்களே இறங்கும் பொழுது, "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்" என்னும் கோஷம் எவ்வளவு போலியானது என்பது நன்கு விளங்குகிறது. உதட்டில் ஒற்றுமைத் தேன்—உள்ளத்தில் வேற்றுமை விஷம் இவர்களுக்கு!

ஒரு திணைக் களம்; அதன் பிரதம கணக்காளர் ஒரு அப்பாவி! அவருக்கெதிராய் ஒரு தொழிற் சங்கப் பிரமுகர் (தொழிலாளி!) ஒருஅமைச்சரிடம் சென்று முறையிட்டார். அத்திணைக் களத்தின் பிரதம கணக்காளர் ஒரு அசல் தமிழரசுவாதி; அங்கே நிதிக்கிளையில் பெரும்பாலோர் எல்லோரும் தமிழர்கள்; ஆகையால் எங்களால் ஒரு காரியமும் செய்விக்க இயலாது. இதுதான் முறைப்பாடு.

******************

—( சிவா )—

******************

கனம் மந்திரியாரோ உடனே நடவடிக்கை எடுத்தார்—தொலைபேசி மூலம். தொழிலாளர் பிரமுகர் திணைக்களத் தலைவரிடம் அனுப்பப்பட்டார். தலைவர் பிரதம கணக்காளரோடு தொலைபேசியில் கதைத்துவிட்டு அவரிடம் அப்பிரமுகர் அனுப்பப்பட்டார்.

பிரதம கணக்காளர் அவரை அன்புடன் வரவேற்று, ஆசனமளித்து "நீர் இச்சிறு விஷயங்களுக்கெல்லாம் ஏன் மந்திரியிடம் செல்கிறீர்? சென்றாலும் ஏன் என்னைத் தமிழரசு வாதியென்று குற்றஞ் சாட்டினீர்? நேரே வந்திருந்தால் நான் கவனித்திருக்கமாட்டேனா?" என்றெல்லாம் வினவினர்.

அதற்குப் பகரப்பட்ட பதில்? "மந்திரிமாரிடம் போய் நாங்கள் உங்களைத் தமிழரசு வாதியென்றெல்லாம் (பொய்) குற்றஞ்சாட்டினால் தான் இப்படிச் சுலபமாய்க் காரியங்களைப் பார்க்கலாம்." பிரதம கணக்காளரோ வாயடைத்துப் போயிருந்துவிட்டார்.

இச்சம்பவத்தின் படிப்பினைகள்:—

(1) "தமிழரசு வாதிப்" பேய் எவ்விதமாய்ப் பொய்ப் பிரசாரத்திற்கு உபயோகப் படுகிறது என்பதை அரசாங்கம்கவனிக்க வேண்டும்,

(2) தமிழ் ஊழியர்கள் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தலை குனிந்து வாளாவிருப்பது மானக் கேடு; தன்மானத்துடன் ஊழியஞ் செய்யத் துணிவில்லாதவர்கள் இளைப்பாறுதல் நலம்.

(3) தமிழ் ஊழியர்கள் கடமையுணர்ச்சியோடு ஒருவரின் அந்தஸ்தைப் பாராது எல்லாரையும் சமமாய்ப் பாவித்து நடத்தல் வேண்டும்; அதுதான் எமது இனத்தின் பண்பு.

(4) "இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை" (Trade Union Solidarity cutting across racial barriers) ஒரு பழங்கதை; "(மொழிவழி) பிரிந்தால் வாழ்வோம்; இன்றேல் வீழ்வோம்."

# கைத்தொழில்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கலாநிதி
ஆ. சுந்தரலிங்கம்
அதிபர்.
இலங்கை கைத்தொழில் நிலேயம்

சென்ற கட்டுரையில் கைத்தொழிலேப் பற்றியும் கைத்தொழில் மயமாக்குதலின் அவசியத்தைப்பற்றியும் பொதுப்படையாகக் கூறியுள்ளேன். இன்று எங்கள் நாட்டிலுள்ள வளங்களே ஆராய்வேன். வளங்கள் என்னும்போது நாம் பொதுவாக நிலவளம், நீர்வளம் ஆகியவற்றை நினேக்கின்ருேம். ஆனுல் கைத்தொழிலுக்கு இவைமட்டும் போதுமானவையல்ல. கைத்தொழில் விருத்திக்கு அடிப்படையாக இயற்கை வளத்துடன் நாட்டில் கனிப்பொருள் செல்வங்களும் முக்கியமாயிருக்கின்றன. கைத்தொழிலில் இயந்திரங்களே இயக்குவதற்கு வலு மிகவும் வேண்டப்படும். ஆகவே வலுப்பெறக்கூடிய மூலவளங்கள்எவையென ஆராய்தல் வேண்டும். அடுத்தபடியாக மக்கட் சாதனே எத்தகையது என்று நோக்கல் வேண்டும். மக்கள் சாதனே என்னும்போது, இந்நாட்டு மக்களிடையே தொழில் நுட்ப அறிவுடையோர் தொகை என்னவென்றும், பொறிமுறைகளிற் கைதேர்ந்தவர் எத்தனேபேர் உள்ளனரென்றும் ஆராய்தல் வேண்டும். இவர்கள் இயந்திர வேலேகளில் பெற்றுள்ள அனுபவம் என்ன, இயந்திர வேலேகள் எவ்வளவுக்கு விளங்கிக் கொள்கின்றனர், என்றெல்லாம் முதலில் அறிதல்வேண்டும்.

## கனிப் பொருள்

முதலாவதாக இந்த நாட்டு கனிப்பொருள் வளங்கள் எவையென ஆராய்வோம். இலங்கையில் பெறக்கூடிய கனிப்பொருள்கள் இல்மனேற்று (Illemenite) சுண்ணும்புக்கல், களிமண் ஆகியனவும் கடலிலிருந்து பெறும் பொருள்களுமாம். இல்மனேற்று உள்ள ஒரு வகையான கருமண் புல்மோட்டையில் உண்டு. இல்மனேற்றிலிருந்து இரும்புந்தைத்தேனியம் என்னுமொருவகை உலோகமும் பெறலாம். அரசாங்கம் இல்மனேற்றைப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. மண்ணினின்றும் இல்மனேற்றைப் பிரித்தெடுப்பதற்கு ஒரு இயந்திர நிலேயமொன்று, புல்மோட்டையில் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளன. சிமெந்து தொழிற்சாலே ஒன்று காங்கேசன்துறையில் இருக்கிறது. களிமண்ணிலிருந்து மட்பாண்டங்கள்.ஓடு முதலியன செய்யலாம். முல்லேத்தீவில் ஓடு செய்வதற்கு அரசாங்கம் ஆராய்கின்றது.

பிரதானமாக எங்கள் இயற்கை வளங்கள் விவசாயத்திற்கேயுரியவை. இவற்றுள் நெல், மரவள்ளி, எள்ளு, தென்னே, பனே, புகையிலே, நிலக்கடலே, கரும்பு, முந்திரிகை, காய்கறி வகைகள், வாழை, மா, பலா ஆகியன தமிழ் நாட்டுப் பகுதிகளில் வளரக்கூடியவை. இப்பொருள்களின் உபயோகத்தை எல்லோரும் நன்கு அறிவர். இவற்றைப் பெருவாரியாகப் பயிர் செய்வதுல் எங்கள் பொருளாதாரம் விருத்தியடையும். அரசாங்கம் பருத்தி வளர்க்க முயற்சிக்கின்றது. அன்றியும் நிலக்கடலேயிலிருந்து எண்ணெய் எடுக்கும் வழிவகைகளேயும் ஆராய்கின்றது.

## மக்கள் பலம்

எங்களிடையே மக்கட் பலம் போதிய அளவுக்கு இருக்கின்றத எனினும் இக்காலக் கைத்தொழில்களுக்குத் தேர்ச்சி அல்லது தொழில் நுட்பத்திறண் வேண்டும். அதாவது இயந்திரம் இயக்குவோர், பொறிநுட்பத்தொழிலாளர், சிறு கருவித்தொழிலாளர், மேற்பார்வையாளர் ஆகியோரும் தொழில் நுட்ப எஞ்சினியர்களும், இரசாயன அறிஞர்களும் தேவைப்படுவர், எங்களுடைய கல்வி முறையானது கைவேலேகளுக்கும் தொழில் நுட்ப அறிவுக்கும் முதன்மையளிக்கவில்லே. அன்றியும் ''வெள்ளுடை வேலே''களின் மதிப்பைக் கூட்டியுள்ளது, இதனுல் இளேஞர்கள் கந்தோர்களில் கிளார்க் வேலேயாளராகத் தொழில் பார்ப்பதற்கு வேலே தேடித்தேடி அலேகின்றனர். அதனுல் தமது கைத்திறனே உபயோகிக்க முயலுவதில்லே. இத்தகைய மனப்பான்மை கைத்தொழில் அபிவிருத்திக்கு ஏற்றதன்று. எழுத்து வேலேக்கு மட்டும் தகுதியாக்கும் எங்கள் கல்வி முறையினுல் கல்வியின் பெறுமதியும் குறைகின்றது. கைத்தொழில் வல்லமையை உண்டுபண்ணக்கூடிய கல்வியும் பயிற்சியும் கொடுக்க இன்றுள்ள எங்கள் கல்வி முறை முயலவில்லே.

இரசாயன அறிஞர், எஞ்சினியர் போன்றவர்கள் போதியளவுக்கு இருந்தாலும் செய்முறைப் பகுதியில் அவர்களுக்குப் போதிய பயிற்சியில்லே. பல்கலேக்கழகப் படிப்பிலும் இந்தச் செய்முறை அனுபவம் போதியளவுக்கில்லே. எங்கள் கல்வித்திட்டத்தில் இக்குறைபாடு நிவிர்த்திக்கப்படல் வேண்டும். எங்கள் பள்ளிக்கூடங்களில் தொழிலின் பெருமைபற்றித் தீவிரமான பிரசாரம் செய்து எத்தொழிலிலேனும் அது மதிப்பானது என்னும் மனப்பான்மையை மாணவரிடம் உண்டுபண்ணல்வேண்டும். மரவேலே, உலோகவேலே, மோட்டார் பொறிமுறை, மின்முலாம் பூசுதல், வானெலிப்பெட்டிகள் முதலியன திருத்தப் பழகல் போன்ற பாடங்கள் 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டாய பாடமாய் இருக்க வேண்டும்,

## தொழில் நுட்பம்

கைத்தொழிலுக்கு அவசியமான தொழிற்படையொன்றைப்பயிற்றி எடுப்பதில் எவ்வித கவனமும் இதுவரையில் எடுக்கப்படவில்லே. இன்று தொழில் திறமையுள்ள வேலேயாளர் பிற நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்களாவர். இவர்கள் தச்சுவேலே, கொல்லர்வேலே, ஓட்டுவேலே. தகரவேலே ஆக்கத் தொழில்கள் போன்ற பல தொழில்களே தமது முழு உரிமைகளாகக் கொண்டுள்ளனர்.

5-ம் பக்கம் பார்க்க

# நாம் இனி வாழும் வழி என்ன?

(கலாநிதி வ. கணேசலிங்கம், M.Sc. (Econ.), Ph.D. (Lond.)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சென்ற இதழில் வெளிவந்த இக்கட்டுரையின் பகுதியில் தமிழர்களின் கமச் செய்கை முறைகள், நில வளப் பெருக்கத்திற்காக அவர்கள் எடுத்துள்ள பிரயாசைகள் முதலியன பற்றி விளக்கினேம். இதனுல் புலப்படுவது யாதெனில் எங்கள் பிரதேசங்கள் காலநிலை மழைவீழ்ச்சி ஆகியனவற்றில் இயற்கையின் அருளை அதிகம் பெருவிடினும் நம்மவர்களின் பயிர்ச் செய்கைத் திறன், விடாமுயற்சி, விவசாய உபாயங்களைக் காலத்திற்கேற்ப மாறியமைத்தல் முதலிய சிறப்பியல்புகளால் விவசாயமே ஈழத் தமிழ் நாட்டுப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக அமைந்துள்ளது என்பதாகும். தமிழ் சமுதாயத்தினரை இப்போது சூழ்ந்துள்ள நெருக்கடியில், அதிலும் குறிப்பாக அரசாங்க ஊழியர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இன்னல்களை வென்று அவர்கள் கடைத்தேற விவசாயமே முதல் வழிகாட்டியாக வுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நாம் இவ்வாறு கூறுவதற்கு மேலே குறிப்பிட்டவைகளைவிட வேறு காரணங்களும் உண்டு. அவற்றுள் முக்கியமானவைகளை இங்கு விளக்கலாம். முதலாவதாக, எங்கள் பிரதேசங்களில் இப்போது ஆண்டுதோறும் நெற் பயிர் செய்யப்படும் காணிகளைவிட இன்னும் 20,000 ஏக்கருக்குக் குறையாத விளை நிலம் பயிர் செய்யப்படாமல் இருக்கின்றதென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இப்போது இலங்கையில் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நெல்லில் 40 சத வீதத்திற்கும் அதிகமான அளவு தமிழ்ப் பிரதேசங்களில் விளைகின்றதாகும். மேலே குறிப்பிட்ட 20,000 ஏக்கரில் ஒரு பகுதியையேனும் நெற்செய்கைக்கு எடுப்பதனுல் எங்கள் பிரதேசத்து நெல் விளைவுப் பெருக்கத்தை இலங்கையில் உள்ளதில் அரைவாசிக்கு அதிகமாக்கலாம். இப்போதுள்ள அரசியல் நிலைமையையும் எங்கள் பிரதேசங்களின் உணவுப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தையும் கவனிக்குமிடத்து மேற்கூறிய உணவுப் பெருக்கத்தால் ஏற்படும் நயத்தை இன்னும் அதிகம் விளக்க வேண்டியதில்லை.

இரண்டாவதாக, வர்த்தக உடன்படிக்கைகள், உள்நாட்டில் தமிழ் பிரதேச விளைபொருட்கள் மறு பகுதிகளுக்குக் கொண்டு செல்வதை மட்டுப்படுத்தல் முதலான நடவடிக்கைகளினுல் எங்கள் விவசாயத்திற்கு எத்தனையோ இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் தமிழ் விவசாயிகள் தங்கள் சலியாதஉழைப்பினுலும் புத்தி சாதுரியத்தாலும் அவ்விடையூறுகளை வெல்லும் திறன் உடையவர்கள் என்பதைக் குறிப்பிடலாம். உதாரணமாக, மலையாளத்திற்கு யாழ்ப்பாணப் புகையிலை கட்டுப்படுத்தாத வகையில் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டதும் தமிழ் விவசாயிகள் தங்கள் கமங்களை வெங்காயம் மிளகாய் முதலிய பயிர்ச் செய்கைக்கு மாற்றி முன் போல் புகையிலை ஏற்றுமதியாகாததால் அடைந்துள்ள நட்டத்தை ஓரளவு நிவிர்த்தி செய்து தங்கள் விவசாய விரகு(Strategy) எத்தகையதென்பதைக் காண்பித்திருக்கிருர்கள். பொருளாக்கத்தில் இது போன்ற சிறப்பியல்புகளையுள்ள தமிழ் விவசாயிகள் பலர் தாங்கள் செய்யும் பயிர்களைப் பலவிதப்படுத்தியும், ஒவ்வோர் காலத்தில் நாட்டில் ஏற்படும் கேள்விக் கேற்ப அவ்வப் பொருள்களை விளைவித்தும், தங்கள் தொழிலைக் கால மாற்றங்களுக்கு இசைவாக்கியும், வருவாயைப் பெருக்கி அரசாங்க சேவையில் உள்ள தங்கள் சகோதரர்களிலும் பார்க்க நல்வாழ்வு வாழ்ந்து வருகிருர்கள் என்பதை நாமெவரும் மறுக்க முடியாது.

மூன்ருவதாக, நாம் எங்கள் பிரதேசங்களின் விவசாயத்தை பரந்ததாக்கி அபிவிருத்தியடையச் செய்தல் வேண்டும் என்று

(11ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்த இடங்களிலுள்ள மக்கள் பரம்பரையான இக்கைத் தொழிற்களிற் கைதேர்ந்தவராயிருந்தும் தம் பிள்ளைகளுக்கு இத் தொழில்களைப் பயிற்ருது விட்டார்கள். ஏனெனில் சாதித்தடையொன்று அதற்குக் காரணமாயிருக்கலாம் அல்லது காற்சட்டை அணிந்து எழுத்துவேலையைத் தம் பிள்ளைகள் செய்யவேண்டுமென்ற அவாவும் அதற்குக் காரணமாகலாம். இதனுல் கைத்தொழிலுக்கு வேண்டிய திறமையான தொழில் செய்வோரைப் பெற முடியாதிருக்கின்றது. ஆகவே தொழில் பயில்வோர் பயிற்சித் திட்டம் ஒன்று மிகவும் அவசியமாகின்றது. தொடக்கத்தில் அதற்குப் பணம் அதிகம் செலவாகுமெனினும் அபிவிருத்தித் தாபனத்தாரின் ஆரம்பவேலைக்கு இது மிகவும் தேவைப்படும். இத்தகைய உள்ளூர் பயிற்சியோடு மாணவர் தொழிற் பள்ளிகளிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பயிற்சி பெறக் கூடியதாய் இருத்தல் வேண்டும். அபிவிருத்தியில் இறங்கியுள்ள எந்தத் தாபனமும் தொழில் நுட்பக் கல்வி எவ்வளவு முக்கியமானது என்பதைப் புறக்கணிக்க முடியாது. இவை இக்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இத்தொழில் முறைக் கல்வியைப் படிப்பிக்கும் தாபனங்களுக்கும் நன்கொடை கொடுத்து உதவுதலும் வேண்டும்.

(தொடரும்)

# எழுச்சி

1962-ம் ௵ சித்திரைத் திங்கள்


## தமிழ் (பேசும்) பாட்டாளி மக்களே! ஒன்றுபடுங்கள்!

பாடுபடும் பாட்டாளி!
மாடாக உழைக்கும் தொழிலாளி!
பொழுது புலர்வதன் முன் வயல் போய்
பொழுது சாய்ந்த பின் வீடு திரும்பும்
விவசாயி!
இவர்களது உரிமைப் போராட்ட நாள்!
பொதுவுடமை சமுதாயத்துக்கு
அடிகல் நாட்டிய திருநாள்!
முதலாளித்துவத்துக்கு
சாவுமணியடித்த பொன் நாள்!

## மே தினம்!!

பட்டது போதும், இனிப் பட முடியாது இத்துயரம்; எட்டு மணி வேலை, எட்டு மணி ஓய்வு என்று போர்க்குரல் எழுப்பிப் புரட்சி செய்த சிகாகோ நாட்டுத் தொழிலாளர் மீது முதலாளித்துவ அரசு துப்பாக்கிகளைப் பேசச் செய்தது. நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் பிணங்களாக்கப்பட்டனர். அவர்கள் கொட்டிய குருதி வீதிகளைச் சிவப்பாக்கியது. இதுதான் உலகமெங்கும் உள்ள பாட்டாளிகளால் ஆண்டாண்டு தோறும் கொண்டாடப்படும் மே தினத்தின் வரலாறு.

இந்த நாட்டிலும், இவ்வாண்டு தொழிற் சங்கங்களும், அரசியற் கட்சிகளும் மே தினத்தை வழக்கம் போலக் கொண்டாடின.

அப்படிக் கொண்டாடப்பட்ட மே தினவிழாவில் தொழிலாளர் ஒற்றுமை பற்றி பேசப்பட்டது. வற்புறுத்தப்பட்டது.

குறிப்பாக வடக்குப் படையெடுத்த சில தொழிற் சங்கத் தலைவர்களால் இந்த ஒற்றுமைப் பல்லவி கொஞ்சம் அழுத்தமாகப் பாடப்பட்டது.

நீண்ட நாட்களாக நிலவிய ஒற்றுமை இடையில் யாரோ இனந்தெரியாத வகுப்புவாதிகளால் குலைக்கப்பட்டுவிட்டதாகவும், தொழிலாளர்கள் இவர்கள் சூழ்ச்சிவலையில் வீழ்ந்துவிடாமல், ஜாதி மத வேற்றுமையை மறந்து சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்துடன் ஒன்றுபட வேண்டும் என்ற தோரணையில் பேச்சுக்கள் இருந்தன.

ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை வேண்டுமென்று புலம்புவதிலிருந்தே இப்பொழுது வேற்றுமை இருப்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள் என்பதைக் கண்டு உண்மையிலேயே மனம் மகிழ்கிறோம்.

இன்றைக்கல்ல, பல்லாண்டு காலமாகவே பேசியும்—எழுதியும் வற்புறுத்தப்பட்டு வந்த இந்த ஒற்றுமை இன்னும் கைகூடி வராதது மட்டுமல்ல, இருக்கிற கொஞ்ச ஒற்றுமையும் தேய்ந்து வேற்றுமை வேறு வளர்வதைக் கண்டு இவர்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளார்கள் என்பது வெளிப்படை.

இதய சுத்தியோடு சொல்லிக்கொள்கிறோம் பரஸ்பர ஒற்றுமைக்கு—நிரந்தர ஒற்றுமைக்கு—நாம் விரோதிகளல்ல. நேசக்கரம் நீட்டி, அதை ஆசையோடு வரவேற்க இன்றும். நாளையும், அதற்கு மறுநாளும், ஏன் எப்பொழுதுமே நாம் தயார்!

ஆனால் இந்த ஒற்றுமை எந்தஅடிப்படையில் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்? சிறுபான்மை இனப் பாட்டாளி மக்கள் ஊமைகளாகவும், உரிமையற்றவர்களாகவும், இரண்டாம்தர தொழிலாளிகளாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் எதிர்பார்க்கும் ஒற்றுமை வெறும் கானல் நீர்! அந்தக் கானல் நீரைத் தேடி ஓடி வீணே காலம் கழிக்க வேண்டாம்!!

புலிக்கும் ஆட்டுக்குட்டிக்கும் இடையில் ஒரே விதமான முறையில்தான் உறவு-ஒற்றுமைஇருக்க முடியும். முன்னதன் வயிற்றுக்குள் பின்னது சங்கமமாக வேண்டும். வேறு விதமான உறவு—ஒற்றுமை இரண்டுக்கும் இடையில் இருக்க முடியாது. இது இயற்கை.

அப்படி மீறி ஒரு போலி ஒற்றுமையை அவற்றிற்கு இடையில் பார்க்கவேண்டுமென்றால் அதை சேர்க்கஸில் (CIRCUS) தான் காணமுடியும். அங்கேதான் புலியும் ஆடும் இணைந்து நிற்கும். இது செயற்கை.

இந்த நாட்டு பெரும்பான்மை--சிறுபான்மை தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் புலிக்கும்—ஆட்டுக் குட்டிக்கும் இடையில் நிலவும் போலி ஒற்றுமை, செயற்கை ஒட்டுத்தான் இப்போதுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் (பேசும்) பாட்டாளி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான் இந்த உண்மையை விளக்கிக் காட்டும் வண்ணம் எழுது வினைஞர் சங்கம் தமிழ் (பேசும்) பாட்டாளி மக்கள் ஒன்று பட வேண்டும் என்ற இலட்சிய முழக்கத்தை தனது மே தினச் செய்தியாக விடுத்தது.

வரலாற்று அடிப்படையில் தமிழ்(பேசும்) பாட்டாளி மக்கள் அத்தனைபேரும் இன்று இல்லா விட்டால் நாளை, அல்லது அதற்கு மறுநாள் இந்த வகையில் மொழிவழி பிரிந்து ஒன்றுபடுதல் தவிர்க்க முடியாத கட்டாய நிகழ்ச்சி! காலதேவனின் கைகள் அதை இந்த நாட்டு வரலாற்று ஏட்டில் ஒரு நாள் எழுதியே தீரும்!!

எவ்வண்ணம் நாம் தமிழ் (பேசும்) தொழிலாளர்களை மொழி வழி பிரியுமாறு மே தினத்தில் அறைகூவல் விடுத்தோமோ, அதே கருத்தை தமிழ் நாட்டில் இருந்து வெளி வரும் முரசொலி ஏடும் அதன் ஆசிரிய தலையங்கத்தில் எதிரொலித்திருக்கிறது. அதன் சுருக்கம் இந்த இதழில் வேறோர் பக்கம் வெளியாகியிருக்கிறது. வாசகர்கள் அதை ஊன்றிப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வகுப்பு வாதம், குறுகிய நோக்கம், தொழிலாள வர்க்கத்தை கூறு போடும் முயற்சி என்று குற்றப் பட்டியல் படிப்பவர்களுக்கு பொதுவுடமை நாட்டுத் தொழிலாளர்களே தங்களை உருசியத் தொழிலாளர், சீனத் தொழிலாளர், போலந்து தொழிலாளர், ருமேனியத் தொழிலாளர் என்று கூறிக்கொண்டு தனி அங்கங்களாக தொழிற்படுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அவர்கள் அப்படி இயங்கும்போது நாம் மாத்திரம் ஏன் நம்மை தமிழ்த் தொழிலாளர் என்று கூறிக்கொண்டு, தனிச் சங்கமாகப் பணி புரியக் கூடாது?

உலக ஒருமைப்பாட்டுக்கு, உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற சுலோகத்துக்கு நாம் எதிரிகளல்ல. ஆனால் அந்த நல்லநாள் வரும் வரை மொழி வழி பிரிந்து ஒன்றுகூட ஆசைப்படுகிறோம்.

உலகத்திலுள்ள வெவ்வேறு இனத் தொழிலாளர்கள் தங்கள் சங்கங்களை ஒரு நாள் காலை 6 மணிக்குக் கலைத்துவிட்டு, அன்று முதல் ஒரு கொடிக்குள் உலகத் தொழிலாளர் என்று இயங்க முனைந்தால், தமிழ்த் தொழிலாளர்களாகிய நாங்கள் அதற்கு முதல் நாள் இரவு 12 மணிக்கே எங்களது சங்கத்தைக் கலைத்துவிட்டு அந்தக் கொடிக்குள் திரளத் தயாராயிருக்கிறோம்!

எனவே இந்த நாட்டுத் தொழிலியக்கவாதிகளுக்குப் பணிவன்புடன் கூறிக் கொள்வோம். சர்வ தேசியம், தொழிலாளர் ஒற்றுமை என்ற கோஷங்களுக்குள் எமது தனித் தன்மையை, சுய மரியாதையை இழந்து இன்னொரு இனத்தின் தயவு-தாட்சண்யத்துக்குக் காத்திருக்கும் இரண்டாம்தர தொழிலாளர்களாக வாழ நாம் தயாராயில்லை.

**உணவு ஆக்க நெருப்பும் நீரும் வேண்டும். இல்லாவிட்டால் உணவு சமைக்க முடியாது. சிறுபிள்ளையும் அறியும் உண்மை இது. ஆனால் அதற்காக நெருப்பில் நீரைக் கொட்டினால் உணவு வந்துவிடுமா? இல்லை. நெருப்புக்கும் நீருக்கும் இடையில் ஒரு தடை, பானை-சட்டி உருவில் தேவைப்படுகிறது.**

**ஆகாயத்தில் பறக்கும் விமானம் சுயேட்சையாகப் பறப்பதில்லை. இறங்குவதற்கு ஒரு இலக்கை வைத்துக் கொண்டுதான் பறக்கிறது.**

இவை போலவே நாமும் சர்வ தேசியத்துக்கும் தேசியத்துக்கும் இடையில் ஒரு கோடு கிழித்து, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பணியாற்ற விரும்புகிறோம்.

இதைத் தவறு என்று கருதுவோர் வரலாறு போதிக்கும் பாடத்தைப் புரிந்துகொள்ள மறுக்கும் கருத்துக் குருடர்கள் என்போம்.

எனவே இந்த நாட்டுத் தமிழ்ப் பேசும் பாட்டாளி மக்களுக்கு மீண்டும் சொல்கிறோம்.

வரலாறு போதிக்கும் படிப்பினையை மனதில் நிறுத்தி தமிழ் (பேசும்) பாட்டாளி மக்களது ஒற்றுமைக்கு சோராது அயராது பணி புரியுங்கள்! அடுத்த ஆண்டு மே தினத்தில் இத்தரணி கண்டு வியக்கும் வண்ணம் ஒரு அணியின் கீழ் ஒன்று திரண்டு பரணி பாடுவோம்!!

விளம்பரம்

# அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்

**துர்ப்பிரசாரம்:**

எமது அங்கத்தவருக்குள்உள்ள ஒற்றுமையைக் குலைத்து வேடிக்கை பார்க்கச் சில விஷமிகள் முயலுகின்றனர் என்பதை அறிகிறோம். அநேகர் மறைமுகமாகச் சிங்களம் படிக்கிறார்கள் என்றும் ஏன் மற்றவர்களும் படிக்கக் கூடாது என்றும் பிரசாரம் செய்கிறார்கள் இந்த விஷமிகள். இவர்கள் சொல்லுவதில் சிறிதேனும் உண்மை இருப்பின், அதை இவர்கள் நிரூபிக்கட்டும். நெஞ்சில் உரமும் மனத்தில் உறுதியும் பூண்டு அநியாயம் எது வரினும் இறுதி வரை எதிர்ப்போம் என்று திட சங்கற்பம் செய்துள்ள எமது அங்கத்தவர்கள் இதற்குச் செவி சாய்க்க மறுப்பதில் வியப்பில்லையே!

**இன்னும் உணரவில்லை:**

இனசார்பற்று இயங்குவதாகக் கூறும் தொழிற் சங்கங்கள் அவற்றின் அங்கத்தவர்பலரைப் பாதிக்கக்கூடிய முறையில் அரசாங்கம் இயற்றும் சட்டங்களை எதிர்க்க எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதிருந்தும் அச்சங்கங்களிலேயே தொங்கிக்கொண்டிருக்கும் எம் நண்பர்களின் மனப்பான்மையை என்னவென்று கூறுவது? உரிமைகள் பறிபோயும் உண்மை நிலையை உணர முடியாத அப்பாவிகள். ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்கக் கும்பகோணத்தில் கோதானம் செய்யும் இவர்கள் இப்போது இல்லையேல் என்றுமே தங்கள் நிலையை உணர மாட்டார்கள்.

**மானமே பெரிது:**

மனித வர்க்கத்தின் உயரிய உரிமை மானம். அது பறிபோன பின் காப்பாற்றப்பட வேண்டிய உரிமை வேறு எதுவுமே இருக்க முடியாது. குழாயில் தண்ணீர் இல்லை என்பதும் அலுவலகத்தில் இடவசதி குறைவு என்பதும் எல்லாம் இரண்டாந்தர உரிமைகள். கேவலம், இவற்றுக்காக மாத்திரம் தொழிற் சங்கங்கள் (குறிப்பாக எமது சங்கம் போன்றவை) இயங்கிவருகின்றன என்று நினைப்பது எவ்வளவு பேதமை?-மானத்தைக் காப்பாற்றப் போராடுவோம். உரிமைகள் தாமாகவே கிடைக்கும்.

**மே தினம்:**

இம்முறை மே தினம் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. தொழிலாளரின் இந்தப் புனித தினத்தை இலங்கையில் இன்றைய சூழ்நிலையில் கொண்டாடுவது கேலிக்கூத்தன்றி வேறில்லை. தொழிலாளரில் ஒரு பகுதியினரின் உரிமைகள் நாளாந்தம் பறிக்கப்படுவதைக் கண்டித்துப் பரந்த நோக்கம் படைத்த ஏழைப் பங்காளர் எவருமே பேசவில்லை.

**சட்ட நடவடிக்கை:**

எமது சகோதரச் சங்கமாகிய 'அரசாங்க எழுது வினைஞர் சங்கம்' அரசாங்கத்தின் அநியாயச் சட்டங்களை எதிர்க்க முதலாவது வழக்கைத் தாக்கல் செய்துவிட்டது. இது பற்றிய புதினங்களை அறிய இருக்கும் ஆர்வத்தைவிட எமது ஒத்தாசையை நல்க வேண்டிய ஆர்வம் பன்மடங்கு இருக்க வேண்டிய அவசியத்தைக் கூறத் தேவையில்லை. அங்கத்தவராகச் சேராதிருப்போர் இனிமேல் என்றாலும் சேர்ந்து எம்மைப் பலப்படுத்துவோம்.

விளம்பரம்

# தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம், தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவு முகமாக பம்பலப்பிட்டி 'சரசுவதி மண்டபத்தில் புதன்கிழமைகள் தோறும் பொருளாதாரத் துறைகளில் உரைகள் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்திருக்கின்றது. காலநிலை காரணமாகவும் கூட்டங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைந்ததனாலும் மே மாதம் 23ஆம் 30ஆம் திகதிகளில் கூட்டங்கள் நடைபெற மாட்டாது.

சங்கத்தின் தலைவர் திரு. இ. பாலசிங்கம் அவர்கள் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய காலம் தொடக்கம் அவருடைய பொறுப்பையும் ஏற்று சங்கத்தை வழி நடத்திய திரு. தி. இராசதுரை அவர்களும் 31-3-1962-ல் இளைப்பாறிவிட்டார். அவருடைய இடத்துக்கு திட்ட அமைப்பு அலுவலக ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி வ. கணேசலிங்கம் அவர்கள் ஆட்சிக் குழுவால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

கடந்த ஆட்சிக் குழுக் கூட்டத்தில் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை தடைகளொன்றுமில்லாவிடில் யூன் மாதம் 10ஆம் திகதி நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இக் கூட்டம் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

சங்கத்துக்குச் சேர வேண்டிய உறுப்புரிமைப்பணம் பற்றிய விபரங்கள் கிளைச் சங்கங்களுக்கும் அலுவலகங்களிலிருக்கும் செயல் இணைப்பு அலுவலாளர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. உறுப்பினர்களெல்லோரும் சேரவேண்டிய பணத்தை தாமதமின்றிக் கொடுத்தால் சங்கத்தின் கடமைகளைத் தொடர்ந்து செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இ. நாகேந்திரம்,
பொதுச் செயலாளர்.

62 1/5, குமாரன் இரத்தினம் தெரு,
கொழும்பு-2.

# மனம்போல் மாங்கல்யம்

**[எழுதியவர்: மீசாலையூர் சிவன்]**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பள்ளிக்கூடத்தில் நிறைந்த நிம்மதி கிடைத்தது. மாணவர்கள் கருத்துடன் சொல்லிக் கொடுப்பவைகளை கிரகித்து தம் திறமையைக் காட்டி என்னை மகிழ்வித்தனர். அவர்கள் என்னிடம் காட்டும் மதிப்பே அவர்கள் அன்பிற்கு என்னைத் தலைவணங்கச்செய்தது. அக்கா, அக்கா என்றும், ரீச்சர் ரீச்சர் என்றும், அவர்கள் அன்புக் கூச்சல் கேட்டு என் மனம் துள்ளாத நேரமே இல்லை.

இரண்டு மணிக்குப் பின்பு எனக்கு ஓய்வு. வீட்டுத் தோட்டத்தில் சின்னச் சின்ன வேலைகளைச் செய்வேன். அதில் எல்லையற்ற இன்பம் கண்டேன். குழந்தையைச் சீராட்டி வளர்க்கும் அனுபவம் எனக்கு இன்னமும் கிடைக்கவில்லை. இந்த சிறு சிறு பயிர்களை வளர்ப்பதில் கவனமுடன் பராமரிப்பதில் நான் அடையும் இன்பம் அதற்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததில்லை.

நாட்கள் செல்லச் செல்ல நான் உருத்திரபுரத்திற்கு மிக மிக அறிந்தவளாகிக்கொண்டு வந்தேன். பச்சிளங் குழந்தைகளின் பெற்றோர்கள் குழந்தைகள் மூலம் என்னுடன் அன்புடனும் மதிப்புடனும் பழகினார்கள். தங்கள் குறை நிறைகளை மனம் விட்டுக் கூறினார்கள். நான் சொல்வன வற்றிற்கு மதிப்புக் கொடுத்து கேட்டு அதற்கேற்ப நடக்கவும் செய்தனர்.

அவர்களுக்கு காலையும் மாலையும் வேலை. இடையில் ஒன்பது மணி தொடக்கம் மூன்று மணி வரைக்கும் தமது பொழுதை அவமே போக்குவதாகவும், நித்திரை கொள்வதிலும், ஊர் வம்பு கதைப்பதிலும், செலவிடுவதாகவும் கேட்கும்போது என் மனம் வேதனைப் பட்டது. இவர்கட்கு என்னால் ஏதேனும் செய்ய முடியாதா என எண்ணினேன். அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை நல்ல வழியில் செலவிடவும் அதன்மூலம் அவர்கள் பயன் காணவும் என்ன செய்யலாம் என எண்ணினேன். எதுவுமே புரியவில்லை.

அப்பொழுதுதான் வட்டக்கச்சியில் விவசாயப் பண்ணை வைத்து நடத்தும் சோமுவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். பட்டப் படிப்புப் படித்த சோமு படித்த வாலிபர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் ஐக்கிய விவசாயப்பண்ணை ஒன்றை நடத்தி வருவதாகவும், முன்மாதிரியான பல விவசாய முறைகளை கையாண்டு விஞ்ஞானத்தின் உதவியுடன் விவசாயத்தை விருத்தி செய்யும் முறைகளைத் தானும் கைக்கொண்டு, மற்றவர்களும் கடைபிடித்து பயன் காணப் பாடுபட்டு வருகின்றார் எனவும் பல பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டு முன்னின்று உழைத்து வருவதாகவும் கேள்விப் பட்டேன். அவருடன் ஆலோசித்தால் ஏதாவது செய்யலாம் என்று நம்பி வட்டக்கச்சிக்கு அவரின் பண்ணைக்கு ஒரு சனிக்கிழமை சென்றேன்.

வரவேண்டும், பவானி வரவேண்டும் — நிமிர்ந்து பார்த்தேன், என் முன்னால் சிவானந்தன் சிரித்தபடி நின்றார். எனக்கு ஒரே ஆச்சரியம்; பெரு மகிழ்ச்சி.

நீங்களா அண்ணா!! இங்கு எங்கு வந்தீர்கள்? இங்குதான் வேலை செய்கின்றனர் என் தம்பி, தங்கை மனைவி. நீ .....? -அண்ணா நான் உருத்திரபுரத்தில் படிப்பிக்கிறேன். ஒரு முக்கிய விடயமாக சோமுவைச் சந்திக்க வந்தனான். சோமுவை உனக்குத் தெரியுமா?- நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவ்வளவுதான். அதோ சோமுவே வருகின்றான்.

நோக்கினேன். அவர்? அவரே தான். இன்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு உருத்திரபுரத்தில் சந்தித்தேனே அதே அவர் தான். அவரோடு இணைந்து நெருங்கி சிரித்து பேசிக் கொண்டு வரும் பெண் யார்? அவர் மணந்து விட்டாரா? என் எண்ணம் மண் மேடுதானா? அவர் மிகக் கிட்ட நெருங்கி வந்தார். தனியாக.

சோமு இவர் உருத்திரபுரத்தில் படிப்பிக்கும் ஆசிரியை பவானி. சிவானந்தன் அறிமுகப்படுத்தினார்.

பவானியை முன்பே எனக்குத் தெரியும் அண்ணா நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். உருத்திரபுர உயர்விற்கு முழு ஊக்கமுடன் பவானி உழைத்து வருவதாகக் கேள்விப்பட்டேன். அந்தப் பவானி இவ என்பதுஇன்றுதான் தெரியும். உனக்கும் தெரியுமா அண்ணா எங்கள் புட்டிவீடு சின்னண்ணனின் ஒரே மகள்தானே பவானி.

நான் மகிழ்ச்சியாலும் வேதனையாலும் தவித்தேன். சோமுவை உற்று நோக்கினேன் என் உள்ளம் துள்ளினாலும் அவர் இன்னொருத்தியின் கணவனல்லவா? நான் சென்ற விடயமாக இருவருடனும் விரிவாகக் கதைத்து முடிவாக அவர்களின் தங்கை பூபதியை அங்கு அனுப்பி வைப்பதாக முடிவாயிற்று.

அடுத்த வாரம் உருத்திரபுரம் சனசமூக நிலையம் பன்னவேலைப் பாடசாலையாயிற்று. இளம்பெண்கள், தாய்மார்கள் நிறைய வந்தார்கள். ஊக்கமுடன் பயின்றார்கள். பயனும் கண்டார்கள். வர வர எமக்கு ஆதரவும்ஒத்துழைப்பும் உதவியும் பெருகிக்கொண்டு வந்தது. கள்ளம் இல்லா உழைப்பிற்கு உள்ளம் நிறைந்த வரவேற்பும் ஆதரவும் நிச்சயம் கிடைக்கும் என்ற என் நம்பிக்கை பலிதமாகிக்கொண்டு வந்தது.

ஆனால் என் உள்ளம் நிம்மதியில்லாமல் தவித்தது—இல்லை துடித்தது. சோமுவும் அடிக்கடி வந்தார். அன்புடன் சிரித்துச் சிரித்துப் பழகினர். அந்நேரம் மட்டும் மனம் மகிழ்ந்தேன். அவர் விட்டுப் போனதும்... ...என் இதயமே என்னைக் குத்திக் குடைந்தது. அவர் இன்னொருத்தரின் சொத்து.

(10-ம் பக்கம் பார்க்க)

# 'மே' தினச் செய்தி

**அரசாங்கத் துறையிலும் அரசாங்கக் கூட்டு (Semi-Govt.)த் துறையிலுமுள்ள தமிழ் பேசும் தொழிலாளருக்கு!**

**21-5-61ல்** அரசாங்க எழுது வினைஞர் சங்கம் நிறுவப்பட்ட பின்பு வரும் முதல் 'மே' தினமாகிய இத்தினத்தில், எவ்விதத்திலும் மகிழ்ச்சிக்குரிய செயலன்றெனினும், இச்செய்தியை உங்களுக்கு விடுக்க வேண்டுவது தன் கடமையெனச் சங்கம் கருதுகிறது.

'தொழிலாளர் ஒற்றுமை' என்னும் சுலோகத்தின் பாலான எமது கருத்தை வருத்தத்துடன் திருப்பி ஆராய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எமது சிங்களத் தோழர்களுடன் நாம் தோளோடு தோள் நின்று பல போராட்டங்களில் ஈடுபட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால் 1956ம் ஆண்டின் நிகழ்ச்சிகளால் உண்டான திருப்பம், 1958ல் முதன் முதலாக எமது முன்னுள் தோழர்கள் சிலருக்கு தொழிலாளர் ஒற்றுமைக் கோட்பாட்டில் மனம் குன்றிய போது உச்ச நிலையை அடைந்தது. அதைத் தொடர்ந்து, தென் பகுதி இலங்கைப் போக்குவாக்துச் சபைத் தொழிலாளர் தமது வடபகுதித் 'தோழர்'களின் நீண்ட நாள் வேலைநிறுத்தத்தின்போது ஒன்று பட்டு உதவ முன் வரத் தவறியதும், அரசாங்க லிகிதர் சேவை சங்கம் போன்ற பழமை வாய்ந்த தொழிற்சங்கங்கள் தாம் போற்றி வந்த கொள்கைகளை அரசியல், வகுப்புவாத நோக்கங்களுக்காகக் கைவிட்டதும் எல்லோரும் அறிந்ததே. எனவே **'இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை'** என்னும் கோட்பாடு இன்று வெறும் பழங்கதையென்றும், எவ்வளவு விரைவில் இதனைத் தகர்க்க முடியுமோ அவ்வளவிற்கு எம்மனைவருக்கும் இதனால் நன்மையுண்டு என்ற தவிர்த்தற்கரிய முடிவிற்கு வந்துள்ளோம்.

அரசாங்கம், காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளைக் காற்றில் விட்டு, எம்மைப் பெருமளவில் பாதிக்கும் விதத்தில் அரச கரும மொழிச் சட்டத்தை அமுல் செய்யும் வருத்தத்திற்குரிய செயல் நீங்கள் அறிந்ததே. குடியேற்ற ஆட்சிக் காலத்திலுங்கூட ஒரு மொழிக் கொள்கையாலும் பாதிக்கப்படாத தமிழாசிரியர் பகுதி, சிற்றியல் தொழிலாளர்(Minor Employees) பகுதி போன்றவற்றுள்ளும் மொழிக் கொள்கையைப் புகுத்த மேற்கொள்ளப்படும் முயற்சி, இலங்கைப் போக்குவரத்துச் சபை போன்ற அரசாங்கக் கூட்டுத் துறையிலுள்ளோருக்கு நல்ல முன்னெச்சரிக்கையாகும்; இவ் விடர்களுக்கு அவர்களும் உள்ளாக அதிக நாட் செல்லாது

எனவே 'இனவேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை' என்னும் பொருளற்ற பழங்கதையை விடுத்து **'தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமை'** என்பதே இப்போதிருந்து எமது சுலோகமாக அமைய வேண்டுமென உங்களுக்கு அறிவுறுத்த வேண்டிய கசப்பான கடமையைச் செய்ய வேண்டியவர்களாகிறோம்.

ஆகவே தொழிற்சங்க வானில் புதிய கோட்பாடொன்றில் நம்பிக்கை வைப்போமாக—

**''(மொழி வழி) பிரிந்தால் வாழ்வோம்; இன்றேல் வீழ்வோம்''.**

வரலாறு தரும் பாடங்கள் தெளிவானவை; அவற்றை உணர்ந்து நடக்க வேண்டுமே தவிர புறக்கணிக்கக்கூடாது.

## வாழ்க தமிழ் பேசும் தொழிலாளர் ஒற்றுமை!

28-4-62,
62 1/5, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு-2.

அரசாங்க எழுது வினைஞர் சங்கம்

---

# மனம்போல்..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை எண்ணாதே, எண்ண நினைக்காதே. பெண்மைக்கே துரோகம். உன் இனப் பெண் ஒருத்தியின் வாழ்வைப் பாழாக்காதே என்னுள் இருந்து என்னைக் குடையும் மனச்சாட்சியின் சாட்டையடியைத் தாங்க மாட்டாது தவித்துக்கொண்டே இருந்தேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, வீட்டில் நிம்மதியாக இருந்து அகிலனின் 'வாழ்வு எங்கே'யை வாசித்துக்கொண்டிருந்தேன். அம்மா பழைய பல்லவியை எடுத்தாள். இருபத்தி மூன்றும் முடியப் போகின்றது' இன்னமும் எத்தனை நாட்களுக்கு இப்படி இருக்கப் போகின்றாய்?' இதை அவள் கூறும் பொழுது அவள் குரல் கரகரத்தது. என் இதயம் அழுதது. இரத்தக் கண்ணீர் வடித்தது. எனக்கு உருத்திரபுரத்தில் நல்ல பெயர் புகழ் நிறைய உண்டு. இருந்தும் ஏன்? இவைகளால் ஒரு பெண்ணின் வாழ்வு நிறைவு பெற்றுவிட முடியுமா? மனம் விரும்பியவனை மணந்து வாழக் கொடுத்து வைக்காத பாவி தானே நான். ''அம்மா ஏன் என்னைப் போட்டு வருத்துகின்றாய்? நான் என்றும் உங்கள் குழந்தையாகவே இருந்துவிடுகின்றேன். எனக்குத் திருமணமே வேண்டாம்'' வெளியே மணிச் சத்தம் கேட்டது. கடிதம். பரபரப்புடன் படித்தேன்.

அன்புள்ள தங்கை பவானி, உன்னைப் பற்றி நிறைய அறிந்து பழகியவன் நான். எனினும் உன் இதயத்து ஆழத்தை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. என் தங்கை பூபதி இராசனை மணம் செய்ய விரும்புவதை அறிந்து ஆவன செய்ய முயன்றேன். அண்ணன் மணந்த பின்பு தான் என் திருமணம் என்று உறுதியாகக் கூறிவிட்டாள் பூபதி. அவனிடம் கேட்டபொழுது மூன்றுண்டுகளாக என் உள்ளத்தில்

(12ம் பக்கம் பார்க்க)

வற்புறுத்தும் போது பயிர்ச்செய்கையை மாத்திரம் குறிப்பிடுவதாகக் கருதக் கூடாது. பால் உற்பத்திப் பெருக்கம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு முதலியனவும் இதனுள் அடங்கியதாகக் கொள்ள வேண்டும். இவற்றுள் பாற் பண்ணைகள் அமைக்க வேண்டிய அவசியத்தை விசேடமாகக் குறிப்பிடலாம். இலங்கையில் தற்போது குடிகளின் முதலாம் விரோதி காசநோய் என்பது எல்லோரும் அறிந்ததே. மற்றப் பிரதேசங்களைவிட வடமாகாணத்திலேதான் இந்நோய் அதிகமாகவுள்ளது என்பது சுகாதாரப் பகுதி வெளியிட்ட உண்மை. காசநோய் பரவுதலுக்கு முக்கிய காரணம் குடிகளின் உடல் நலம் குன்றியிருத்தலேயாகும். சத்து நிறைந்த குறைந்தளவு உணவு இல்லாமல் அநேகர் கஷ்டப்படுவதும் பலரும் அறிந்த உண்மை. உடலைப் பேண வேண்டிய சத்துக்கள் உள்ள உணவு வகைகளில் பால் தலை சிறந்ததாகும். மேல் நாடுகளில் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு சராசரி 20 அவுன்சு பால் அருந்துகிறார்கள். இங்கு நம்மவர்களோ 1 1/2 அவுன்சு கூட உட்கொள்ளுவதில்லை. பால் உற்பத்திப்பெருக்கத்தின் அவசியத்தை இன்னும் விவரிக்கவேண்டியதில்லை, கலப்பு விவசாயத்தில் கால் ஏக்கரோ, எட்டிலொரு ஏக்கரோ பயிர்ச் செய்கையில் உள்ள விவசாயிகள் இரண்டு மூன்று பசுக்களையும் வைத்துப் பேணி பால் தங்கள் நுகர்ச்சிக்கு அதிகமாகவுள்ள விடத்து மற்றவர்களுக்கும் தந்துதவியது எங்கள் மரபு. அந்த வகையிலோ அல்லது பண்ணை (Dairy) முறையிலோ பால் உற்பத்தியை இப்போதுள்ளதிலும் பத்து மடங்காவது பெருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

# நாம் இனி வாழும்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகையால் இக்கட்டுரையின் தலையங்கத்தில் விடுத்துள்ள கேள்விக்கு, அதாவது "நாம் இனி வாழும் வழி என்ன?" என்பதற்கு விடையாய் அமைந்துள்ளதில் பிரதானப் பகுதி "விவசாயம்" என்பதேயாகும். விவசாயிகளாயினும் சரி, அரசாங்க உத்தியோகத்தரானாலும்சரி, எந்தத் தமிழ் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு விவசாயமே தமிழ் பிரதேசங்களின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்பதையும் அரசாங்க சேவையை நம்பியிருப்பதன் மடமைத்தனத்தையும் விளக்கி உணர்த்த வேணும். இதுவே அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யக் கூடிய பெருதவியும் கடமையுமாகும்.

தமிழ் குடிமக்கள் எல்லோருக்கும் விவசாயத்தில் வாய்ப்புக்கள் கிடைக்காது என்பது உண்மையே. இருந்தும், விவசாயத்தைப் பலவிதப்படுத்துவதாலும், இப்போது பயிர் செய்யப்படாத விளை நிலங்களை வயல்கள் அல்லது கமங்கள் ஆக்குவதனாலும் எம்மவருள் பெரும்பாலோருக்கு விவசாவத்தில் போதிய வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஏனையோருக்கு சிறு கைத்தொழில்களிலோ (Small Industries), குடிசைக் கைத்தொழில்களிலோ வேலைகள் கிடைக்கும்படி திட்டமிட்டு எங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யலாம். இவைகள் எல்லாம் இனி மேல் தேடக்கூடிய, ஏற்படுத்தக் கூடிய வழி வகைகள்தான் என்றாலும், எங்கள் முயற்சிக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றவில்லை.

இக்கட்டுரையை முடிக்குமுன் இப்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களைப் பற்றியும் சிறிது கூற வேண்டியிருக்கிறது. உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறுதவர்களுக்கு வருடா வருடச் சம்பள உயர்வு இல்லாதபடியால் அவர்கள் தாமாகவே சேவையை உடனே விட்டுவிடுவது பற்றி விவாதங்கள் நடைபெறுகின்றன. இப்பிரச்சனையை விவரமாக ஆராய வேண்டியில்லை. எங்கள் புதன்கிழமைக் கூட்டங்களில் இதைப் பற்றிய அபிப்பிராயங்கள் தெளிவாக்கப்பட்டுவிட்டன. சுருக்கமாகக் கூறின், அவ்வபிப்பிராயங்களில் அடங்கியுள்ள கோட்பாடு என்னவென்றால், அரசாங்க ஊழியர் எவராவது விவசாயத்திலோ, வேறு முயற்சியிலோ அல்லது தொழிலிலோ ஈடுபட வசதி உடனே ஏற்பட்டால் அரசாங்க சேவையை விட்டு விலகலாம் அல்லது இளைப்பாறலாம். மற்றவர்கள் எல்லோரும் முடிந்த வரையில் சேவையில் இருந்து சம்பள உயர்வு இல்லாவிடினும் தங்கள் பொருளாதார நிலையைச் சீராக்கிக்கொண்டு அதே நேரத்தில் தங்களுக்கு வேறு முயற்சியிலோ அல்லது தொழிலிலோ வாய்ப்புக்கள் தேடிக்கொண்டு இருப்பதல்லாமல், உத்தியோகத்தை உதறி எறிந்துவிடுவதனுல் தங்களினதும் சமுதாயத்தினரதும் நிலைமையை சீர்கெட்டுப் போகாமல் காத்துக்கொள்ளுதல் வேண்டும். இதுவே நாம் கூறும் யோசனையாகும்.

(முற்றும்)

**எங்கள் விளம்பரதாரர்களை தயவு செய்து ஆதரியுங்கள்!**

★ **ஏனென்றால்** ★

**அவர்கள் எங்களை ஆதரிக்கிறார்கள்!**

# கிளைச் சங்கச் செய்திகள்

### யாழ்ப்பாணக் கிளை

11-5-62ல் நடைபெற்ற ஆரம்பக் கூட்டத்தில் பின் வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தலைவர் | — | திரு | K. வைரவப்பிள்ளை | — | கல்வி அலுவலகம் |
| உபதலைவர்கள் | — 1 | ,, | P. சபாரத்தினசிங்கம் | - | பொலிஸ் அலுவலகம் |
| | 2 | ,, | J. S. S. ஆனந்தம் | — | கச்சேரி |
| கௌரவ செயலாளர் | — | ,, | A. மாணிக்கம் | — | கச்சேரி |
| துணைச் செயலாளர் | -- | ,, | E. மயில்வாகனம் | ... | தொழிற் கந்தோர் |
| பொருளாளர் | — | ,, | S. நாகலிங்கம் | ... | கச்சேரி |
| கணக்காய்வாளர் | — | ,, | S. தனபாலசிங்கம் | ... | உள்ளூராட்சி அலுவலகம் |

**செயற்குழு உறுப்பினர்கள்:-**

1. N. அந்தோனிப்பிள்ளை ... மாவட்ட நீதிமன்றம்
2. V. தேவராசா ... காணிப் பதிவகம்
3. S. K. வில்வராசா ... கச்சேரி
4. K. சாம்பசிவம் ... கச்சேரி
5. V. பொன்னுத்துரை ... சுகாதாரப் பகுதிக் கிளை
6. K. சிவபாதசுந்தரம் ... பொது வேலைப் பகுதி
7. S. K. வேலாயுதர் ... கல்வி அலுவலகம்
8. S. K. நடராசா ... உள்ளூராட்சி அலுவலகம்
9. E. சாம்பசிவம் ... கல்வி அலுவலகம்.

## மனம்போல்..

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருத்தி ஆட்சி செய்து வருகின்றாள், ஆனால் அவள் உள்ளத்தில் எனக்கு இடம் உண்டோ? அதை என்னால் அறிய முடியவில்லை. இந்த நிலையில் என்னால் திருமணத்தைப் பற்றி எண்ணவும் முடியவில்லை. தெண்டித்து பூபதியின் மணத்தை செய்து வையுங்கள் என்று கூறிவிட்டான். இதை ஏன் உனக்கு நான் எழுத வேண்டும்? அவன் விரும்பும் பெண் நீதான் பவானி!

சோமுவின் இதயத்தில்எனக்கு இடம் உண்டா? நான் காண்பது கனவல்லவே? ஐயோ! சோமு, எத்தனை வருடங்களாக உங்களுக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றேன். என்னையா உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை? என் இதயம் இன்பத்தால் துள்ளியது. என் திடீர் மகிழ்ச்சியைக் கண்டு அம்மா திகைத்துவிட்டாள். அவள் முகம் கலவரத்தால் கறுத்தது.

அப்பொழுது அண்ணி! அண்ணி! என அழைத்துக்கொண்டு பூபதி வந்தாள், பின்னால் இராசன் தொடர. தூரத்தில் சோமு வருவது தெரிந்தது.

(முற்றும்)

கோழிப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான
சகல கட்டிடச் சாமான்களும்
எங்களிடம் கிடைக்கும்.
**நா. வைத்திலிங்கம் குழு (வரை)**
38, 2-ம் குறுக்குத் தெரு,
450, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.

**யூன் 9ம் திகதி அ. எ. சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம். திரளாக வாரீர்! திட்டங்கள் தாரீர்!**

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்திற்காக கொழும்பு 13, வாசல ரோட்,
டொமினியன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.